**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**MCOP No: 121/2022** **நாள் 27.03.2026**

சாட்சியான வத்திராயிருப்பு காவல் நிலைய ஆய்வாளருக்கு நீதிமன்றத்தின் மூலமாக சாட்சிய சம்மன் எடுத்துக்கொள்ளப்பட்டு சர்வாகி சார்பு ஆய்வாளர் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அவரை இன்று **ம.சா.3** ஆக 1989 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது ஏற்பாட்டின்படி கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் திருமதி.K.சுப்புலட்சுமி, என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோட்டியப்பசாமி | தாலுகா | |
| த–பெ | பாலைய்யா | தொழில் | சார்பு ஆய்வாளர், வத்திராயிருப்பு காவல் நிலையம் |
| கிராமம் | | வயது | 56 |

**முதல் விசாரணை**

நான் சாட்சியம் அளித்துக்கொள்ள நீதிமன்றத்தில் இருந்து சாட்சிய சம்மன் சார்பாகி ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன். எங்களுக்கு சார்பான சாட்சிய சம்மனில் சொல்லியுள்ள வத்திராயிருப்பு காவல் நிலைய குற்ற எண்.49/2019 ல் வாகன விபத்தில் இறந்துபோன ராமமூர்த்தி என்கிற பிச்சைமணி என்பவரின் வழக்கு சம்மந்தமாக குற்ற இறுதி அறிக்கையை வத்திராயிருப்பு குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் குற்றவியல் மேல் நடவடிக்கையை நிறுத்திக்கொள்வதாக (Action Dropped) தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அது **மசாஆ.8**.

**குறுக்குவிசாரணை எதிர்மனுதாரர் தரப்பில்**

இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி திருமதி. சிவசக்தி, காவல் ஆய்வாளர் ஆவார் மேற்படி காவல் நிலைய குற்ற எண்.49/2019 ல் முதல் தகவல் அறிக்கையில் எதிரியாக யாரை காண்பிக்கப்பட்டுள்ளது என்று கேட்டால் அதில் யார் பெயரையும் காண்பிக்கப்படவில்லை. மேற்படி காவல் நிலையத்தில் புகாரானதை திருமதி.கிருஷ்ணவேணி என்பவர் கொடுத்துள்ளார் அவர் வாகன விபத்தில் இறந்துபோன ராமமூர்த்தி என்கிற பிச்சை மணியின் மனைவியாவர். பொதுவாக முதல் தகவல் அறிக்கையின் அச்சு படிவத்தில் வழக்கின் எதிரி அல்லது சந்தேகப்படியான நபர் என்ற இடத்தில் யார் என்பதை குறிப்பிடுவது வழக்கம் என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கையில் அச்சு படிவத்தில் இந்த வாகன விபத்திற்கு தன் கணவரின் இறப்பு சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி தான் அவரால் புகார் ஆனதை கொடுக்கப்பட்டதாக உள்ளது. இந்த வாகன விபத்தானது இறந்துபோன ராமமூர்த்தி என்பவரின் அதிவேகம், அஜாக்கிரதை, காரணமாக அவர் ஓட்டிச்சென்ற பயணியர் ஆட்டோவை அந்த இடத்தில் இருந்த சல்லி கல் மீது

ஏறி இறங்கியதில் ஆட்டோ கவிழ்ந்ததில் அவர் இறந்துபோய் உள்ளார் என்று குற்ற இறுதி அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. இந்த விபத்தானது இறந்துபோனவர் ஓட்டிச்சென்ற ஆட்டோவால் அவர் இறந்துபோய் உள்ளார் என்று காவல் துறையினரால் முடிவு செய்யப்பட்டுள்ளது. 08.05.2019 ம் தேதியில் RC.No.075278 என்று குறிப்பிட்டுள்ளோம். RCS.No. 3/2026 ஆக தேதி 23.01.2026 குறிப்பிட்டுள்ளோம்.

**<u>மறு முதல் விசாரணை அனுமதியுடன்</u>**

இந்த புகாரானதை விபத்தில் இறந்துபோன ராமமூர்த்தி என்பவர் மனைவி விபத்து பற்றி கேள்விபட்ட நபராகவே இருந்து புகாரை கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 27th day of March 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.